பக்கங்கள் 25


# காலை முரசு

## யாழில் 58 பேருக்கு எலிக்காய்ச்சல் உறுதி




[விரிவான செய்தி 3 ஆம் பக்கத்தில்]

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | கார்த்திகை 29 சனிக்கிழமை 14.12.2024 | அதிர்வு 134



# மஹிந்தவின் ஆட்சியில் கடத்தப்பட்ட எக்னெலிகொடவுக்கு என்ன நடந்தது?

## நீதியான விசாரணைகளை நடத்துமாறு அநுர அரசிடம் எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்பு வலியுறுத்தல்



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட தொடர்பான வழக்கு விசாரணைகள் பக்கச்சார்பின்றியும், வெளிப்படைத்தன்மை வாய்ந்த விதத்திலும் முன்னெடுக்கப்படுவதை உறுதிப்படுத்துமாறு பிரான்ஸைத் தளமாகக்கொண்டு இயங்கி வரும் எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்பு (ரிப்போட்டர்ஸ் வித்தெளட் போர்டர்ஸ்) ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான புதிய அரசிடம் வலியுறுத்தியுள்ளது.

02 ▶



# மட்டக்களப்பில் படகு கவிழ்ந்து குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழப்பு



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, முகத்துவாரம் கடல் பகுதியில் மீன்பிடிப் படகு ஒன்று கவிழ்ந்ததில் மீனவர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திராய்மடு, முருகன் கோயில் வீதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளையின் தந்தையான கோடீஸ்வரன் வேணுராஜ் (வயது 34) என்பவரே உயிரிழந்துள்ளார்

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கொக்குவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்



தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்த இந்திய இராணுவத்தின் அதிகாரிகளிடமும், அதே போல இலங்கை இராணுவத் தரப்பினரிடம் தமிழ் ஊடகவியலாளர்கள் எதிர்கொண்ட நெருக்கடிகள், அச்சுறுத்தல்கள், அடாவடித்தனங்கள், சித்திரவதைகளை விவரிப்பதாயின் அது பெரும் நீண்ட காதையாகிவிடும்.

06 ▶



# வடமராட்சியில் எலிக்காய்ச்சல் பற்றி விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகள்!

யாழ். வடமராட்சி பிரதேசத்துக்குட்பட்ட பகுதிகளில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் எலிக்காய்ச்சல் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகள் நேற்று மேற்கொள்ளப்பட்டன.

கொட்டும் மழைக்கு மத்தியிலும் கிராமங்கள் தோறும் சென்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளை முன்னெடுத்தனர்.

இதன்போது துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

பருத்தித்துறை நகர சபை பகுதியிலும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.





## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### மஹிந்தவின் ஆட்சியில்...

"லங்கா ஈ – நியூஸ்" என்ற இணைய செய்தித்தளத்தில் கேலிச்சித்திர ஓவியராகவும் (கார்ட்டூனிஸ்ட்), அரசியல் பத்தி எழுத்தாளராகவும் பணியாற்றிய பிரகீத் எக்னெலிகொட கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனவரி 24 ஆம் திகதி ஹோமாகம நகரில் கடத்திச் செல்லப்பட்டார்.

அவரது கடத்தலுடன் தொடர்புபட்டிருக்கக்கூடும் எனச் சந்தேகிக்கப்பட்ட இராணுவப் புலனாய்வுச் சேவை அதிகாரிகள் 9 பேர் தொடர்பான நீதிமன்ற வழக்கு விசாரணைகள் கடந்த 2019 ஆம் ஆண்டுடன் தடைப்பட்டிருந்த நிலையில், அந்த விசாரணைகள் கடந்த 6 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

இந்நிலையில் இது பற்றிக் கருத்து வெளியிட்டிருக்கும் எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்பு, கடந்த செப்டெம்பர் மாதம் ஜனாதிபதியாகத் தெரிவான அநுரகுமார திஸாநாயக்க, அரசியல் நோக்கங்களுக்காகப் படுகொலை செய்யப்பட்ட மற்றும் கடத்தப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளை உரியவாறு நிறைவு செய்யப்பட்டு, பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படும் என வாக்குறுதியளித்திருக்கின்றார் என்று சுட்டிக்காட்டியுள்ளது.

"பிரகீத் எக்னெலிகொடவின் வலிந்து காணாமல் ஆக்கப்படல் தொடர்பில் உண்மையை அறிந்துகொள்வதற்காக அவரது குடும்பத்தினர் 14 ஆண்டுகளாகத் தவிப்புடன் காத்திருக்கின்றார்கள்.

எனவே, இந்தச் சம்பவம் தொடர்பில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் வழக்கு விசாரணைகள் பக்கச்சார்பின்றியும், வெளிப்படைத்தன்மை வாய்ந்ததாகவும் முன்னெடுக்கப்பட வேண்டும் என உரிய அதிகாரிகளிடம் வலியுறுத்துகின்றோம்.

இந்தச் சம்பவத்துக்குப் பொறுப்பானவர்கள் எவரெனினும், அவர்கள் கொண்டிருக்கக்கூடிய அரசியல் மற்றும் இராணுவத் தொடர்புகளுக்கு அப்பால் அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

அதுமாத்திரமன்றி சாட்சியாளர்கள் மற்றும் விசாரணையாளர்களைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்." – என்றும் எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

# யாழ். மாவட்டத்தில் நேற்று வரை 58 பேருக்கு எலிக்காய்ச்சல் உறுதி

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் அறிவிப்பு




**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது பரவி வரும் எலிக்காய்ச்சல் நோயினால் இதுவரை 58 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“யாழ்ப்பாணம் மாவட்டத்தில் எலிக்காய்ச்சல் நோயினால் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 24 பேரும், கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 24 பேரும், மருதங்கேணி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 6 பேரும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 4 பேரும் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதுவரை இக்காய்ச்சலினால் யாழ்.மாவட்டத்தில் 6 இறப்புக்கள் ஏற்பட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் இந்தக் காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளார். இந்த நோயாளர்களிடமிருந்து அனுப்பப்பட்ட மாதிரிகளில் 3 பேருக்கு எலிக்காய்ச்சல் நோய் இருப்பதாக கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் காய்ச்சல் பரவி வரும் மேற்படி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் யாருக்காவது காய்ச்சல் ஏற்படின் ஒரு நாள் காய்ச்சலாக இருந்தாலும் உடனடியாக அருகிலுள்ள அரச மருத்துவ மனையை நாடும் படி பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நோய் பரவக்கூடிய ஆபத்து இலக்கினரான விவசாயிகளுக்கு விவசாய திணைக்களத்தின் உதவியுடன் கிராம மட்ட விவசாய குழுக்கள் மூலம் தடுப்பு மருந்து வழங்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. மேலும் கடல்நீர் ஏரிகளில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கும், உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் துப்பரவுப் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கும் தடுப்பு மருந்து வழங்கப்பட்டு வருகின்றது. இந்தத் தடுப்பு மருந்தை வாரத்திற்கு ஒரு தடவை உட்கொள்ள வேண்டும்.

மத்திய சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்பு பிரிவிலிருந்து விசேட வைத்திய நிபுணர் குழு ஒன்று இந்த நோய்ப் பரம்பலை ஆய்வு செய்வதற்காக யாழ். மாவட்டத்துக்கு நேற்று (நேற்றுமுன்தினம்) வருகை தந்தது. இவர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கும், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கும், பருத்தித்துறை, கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளுக்கும் சென்று ஆய்வு செய்ததுடன் சில பிரதேசங்களுக்கு கள விஜயமும் மேற்கொண்டிருந்தனர்.

இதற்கு மேலதிகமாக கொழும்பு தொற்று நோய் தடுப்பு பிரிவிலிருந்து இன்னுமோர் விசேட வைத்திய நிபுணர் குழு ஒன்று யாழ்ப்பாணத்திற்கு இன்று (நேற்று) வருகை தரவுள்ளது. இவர்கள் கள நிலவரங்களை ஆய்வு செய்து இந்த நோய் பரம்பலை கட்டுப்படுத்துவது சம்பந்தமாக ஆலோசனை வழங்குவர்.

எலிக்காய்ச்சல் நோய்க்கு சிகிச்சை அளிப்பதற்கும், தடுப்பு மருந்துகளை வழங்குவதற்காகவும் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்ட மருந்துகள் யாழ். மாவட்டத்திலுள்ள சகல சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளுக்கும், இந்த நோய் தீவிரமாக பரவி வரும் பிரதேசங்களிலுள்ள வைத்திசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டள்ளன.” – என்றார்.

# பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு வடக்கு சுகாதார சேவை பணிப்பாளர் விஜயம்



வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் விதான பத்திரணஹாலகே சமன் தர்மசிறீ பத்திரண மற்றும் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் ஆகியோர் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலைக்கு நேற்று விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது அவர்கள் பருத்தித்துறை பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள எலிக்காச்சல் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர்.

அத்துடன், வைத்தியக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் எலிக்காச்சல் நிலைமை தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பொன்றையும் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடத்தியிருந்தார்.



# வவுனியாவில் மத்தியஸ்த தின நிகழ்வு

(கி.வசந்தன்)

வவுனியாவில் மத்தியஸ்த தின நிகழ்வு சிறப்பான முறையில் நேற்று நடைபெற்றது.

வவுனியா மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நீதி அமைச்சின் மாவட்ட பயிற்சி உத்தியோகத்தர் இ.விமல் ராஜ் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

தேசிய மத்தியஸ்த தினமானது ஒவ்வொரு வருடமும் ஜ/லை 18 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில் மாவட்ட மட்டங்களில் இந்த நிகழ்வு கடந்த காலங்களில் அனுஷ்டிக்கப்படவில்லை.

இந்நிலையில், மத்தியஸ்த சபைகளின் செயற்பாட்டை மேலும் வலுவடையச் செய்யும் நோக்கில் நீதி அமைச்சின் ஆலோசனைக்கு அமைய மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவினால் ஒவ்வொரு மாட்டங்களிலும் இந்த நிகழ்வு இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்துக்கான நிகழ்வில் மத்தியஸ்த சபையின் செயற்பாடுகள், அதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட வெற்றிச் செயற்பாடுகள் தொடர்பிலும், அது எதிர்நேக்கும் சவால்கள் தொடர்பிலும் கருத்துரைகளும், அனுபவப் பகிர்வுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, மேலதிக அரச அதிபர் தி.திரேஸ்குமார், மேலதிக அரச அதிபர் (காணி) ந.கமலதாசன், உதவி மாவட்ட செயலாளர் எம்.சபர்ஜா, விசேட காணி மத்தியஸ்த சபை மற்றும் ஏனைய மத்திய சபைகளின தவிசாளர்கள், மத்தியஸ்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.






















# யாழ். போதனா வைத்தியசாலையில் முதியவர் மயங்கி வீழ்ந்து உயிரிழப்பு

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தங்கி நின்று சிகிச்சை பெற்று வந்த வயோதிபர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார்.

நாவற்குழி கிழக்கு, கைதடியைச் சேர்ந்த கந்தையா ஆனந்தராசா (வயது 65) என்ற முதியவரே உயிரிழந்தவராவார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பான மரண விசாரணைகளையாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி திருமதி வி.அன்ரலா மேற்கொண்டார்.

மாரடைப்புக் காரணமாகவே அவர் மயங்கி கீழே வீழ்ந்து உயிரிழந்தார் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

# மீன்பிடிக்கச் சென்றவர் வலிப்பு வந்து மரணம்!

ஆற்றில் மீன்பிடிக்கச் சென்றவர், வலிப்பு வந்ததையடுத்து ஆற்றுக்குள் வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி, தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, உழவனூர் பகுதியில் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் பணிபுரியும் கணேசமூர்த்தி குலேந்திரன் (வயது 33) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தர்மபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.





# முதலாம் பக்கத் தொடர்ச்சி

## இரகசியம் பரகசியம்...

வடக்கு ஊடகவியலாளர்களுக்கு அத்தகைய மோசமான அழுத்தங்களை – அச்சுறுத்தல்களை – தந்த இலங்கை இராணுவ அதிகாரிகளில் முக்கியமான ஒருவர் மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா.

1995இல் யாழ்ப்பாண குடாநாட்டை இலங்கை இராணுவம் கைப்பற்றிய பின்னர் குடாநாட்டில் நிலை கொண்டிருந்த 51ஆவது டிவிஷன் படையணியின் கட்டளைத் தளபதியாக அவர் இருந்தார். அச்செழுவில் அவரது தலைமையகம் இருந்தது. யாழ் நகரத்தில் நிலை கொண்டிருந்த 512 ஆவது பிரிகேட் படையணி அவரது டிவிஷனின் கீழ் வந்தது. அந்த 512 ஆவது படையணியின் செயற்பாட்டு எல்லைக்குள் நான் ஆசிரியாகராகப் பணியாற்றிய 'உதயன்' அலுவலகம் இருந்ததன் காரணமாக உதயனைக் நேரடியாகக் கையாளும் பொறுப்பு தம்முடையது என்ற இறுமாப்பு நிலைப்பாடு அவரிடம் இருந்தது. யாழ்ப்பாணத்தில் அப்போது 'உதயன்' மட்டுமே தனித்து ஒரேயொரு நாளிதழாக வெளிவந்து கொண்டிருந்தது. உதயனின் ஆசிரியர் என்ற முறையில் 51 ஆவது டிவிஷனில் இருந்து ஜானகப் பெரேரா அழைக்கும் சமயங்களில் அவரது அலுவலகத்தில் பிரசன்னமாக வேண்டியிருப்பது எனக்குத் தவிர்க்கவே இயலாத கட்டாயமாக இருந்தது. இப்போது போன்ற ஜனநாயகச் சூழ்நிலை அப்போது இல்லை. படைத் தரப்பின் கெடுபிடிகளும், அதிகாரமும், அட்டகாசங்களும், அடாவடித்தனங்களும் கட்டுமட்டில்லாமல் கட்டவிழ்த்து விடப்பட்ட காலம். அந்த மயிர்கூச்செரியும் அனுபவங்களைப் பகிர்ந்தால் அவை இப்போதைய தலைமுறைக்குக் கட்டுக்கதை நவீனம் போலத்தான் தோற்றும்.

இப்போது எண்ணிப் பார்க்கும்போது சமாளித்து விட்டோம் என்று தெரிந்தாலும் அது நினைத்துப் பார்க்கவே அச்சுறுத்தல் தரும் அனுபவம்.

பேச்சு மொழியில் கெட்ட வார்த்தைகளை அள்ளி கொட்டும் சுடு சொல்வீராக அவர் இருந்தார். அவரது கட்டுப்பாட்டில் யாழ்ப்பாணம் இருந்த போதுதான் பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் யாழ். பிரதேசத்தில் அப்போது காணாமல் ஆக்கப்பட்டார்கள். கேட்டுக் கேள்வியின்றி – வகை தொகையின்றி – படையினரால் இளைஞர்கள் வீடுகளில் இருந்து அள்ளிச் செல்லப்படுவதும், பின்னர் அவர்கள் காணாமல் போவதுமான கொடூரம் அரங்கேறியது அக்கால கட்டத்தில்தான்.

பின்னர் 51 ஆவது டிவிஷன் பொறுப்பிலிருந்து அவர் இடமாற்றம் பெற்று அந்த இடத்துக்கு மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல இடமாற்றம் பெற்று வந்ததும், காணாமல் போவோர் எண்ணிக்கை ஒரு மாத காலத்துக்குள் பூஜ்ஜியத்துக்கு வந்தது.

ஜானக பெரேராராவின் காலத்தில் ஒவ்வொரு தடவையும் அவரது டிவிஷன் படைத் தலைமை அலுவலகத்துக்கு போய் அவரை எதிர்கொண்டு சமாளித்து வருவது என்பது நரகத்துக்கு போய்வரும் விடயமாக இருந்தது. 'செத்தோமா, பிழைத்தோமா' என்று இருக்கும். அந்த அச்சுறுத்தல்களை வெளிப்படுத்தாமல் என்னுடன் மட்டுப்படுத்திக் கொண்டால் தான் என் ஆசிரிய பீடம் தாக்குப் பிடித்து தொடர்ந்து பணியில் நிற்கும் என்பதால், ஜானகப் பெரேராவின் அடாவடி, அட்டூழியக் கர்ண கடூரத்தை எதிர்கொள்ள நான் தனித்தே போவேன். சந்திப்பு முடிந்து வந்தும் நடந்தவற்றை ஆசிரியபீடத்தில் அவிழ்த்துக் கொட்டுவதில்லை. ஏதோ அழுத்தங்களை பேசிச் சமாளித்துவிட்டேன் எனப் பிரதம ஆசிரியர் கானமயிலநாதனிடமும் ஏனைய ஆசிரிய பீடத்தினரிடமும் கூறிச் சமாளித்து விடுவேன்.

ஆயினும் என்னுடன் நீண்ட காலம் 'தினபதி' –'சிந்தாமணி', 'உதயன்', 'காலைக்கதிர்' போன்றவற்றில் இணைந்து பணியாற்றிய உதவியாசிரியர் பேரின்பநாயகம் என் முகபாவங்கள், பேச்சுகளிலிருந்தே விடயங்களை ஓரளவு ஊகித்து கொள்வார். அவருக்கு மறைக்க முடியாது. தனித்து வந்து பேசுவார்.

"என்ன வித்தி பிரச்சினையோ...? ஜானகப் பெரேரா பெரிசாத் தொல்லை கொடுக்கிறானோ...? தாறுமாறாகப் பேசி விட்டானோ...? மிரட்டினானா..?" – என்றெல்லாம் கேட்பார்.

ஜானகப் பெரேராவுடன் எதிர்கொண்ட நெருக்கடிகள் தனியாக ஒரு நூலாக விவரிக்கப்பட வேண்டியவை.

அவரது தூஷண வார்த்தைகளும், அச்சுறுத்தல் பேச்சுகளும், திமிர்த்தன நடவடிக்கைகளும், ஓர் ஊடகவியலாளனை இழிவுபடுத்தும் கீழ்த்தர முறைகளும் இப்போதைய பத்திரிகையாளர்களுக்குப் புரியக் கூடியவையாக இருக்குமோ தெரியவில்லை.

பிற்காலத்தில் கொழும்பில் நான் வெள்ளைவானில் கடத்தப்பட்டு, எதிர்கொண்ட கொடூரங்களுக்கு சற்றும் சளைத்தவை அல்ல ஜானகப் பெரேராவின் அடாவடி அணுகுமுறைகள்.

என்னிடமிருந்த ஒரே ஆயுதமான அப்பாவித்தனமான சிரிப்பையும், அணுகுமுறைப் பேச்சையும் வைத்தே அந்த மோசமான – மிகக் கொடூரமான – பேர்வழியையும் ஒருவாறு சமாளித்தேன் என்பதுதான் கடந்த கால அனுபவம்.

இப்போது – இன்று – அவர் குறித்து நான் பிரஸ்தாபிப்பதற்குக் காரணம் உண்டு.

இராணுவ சேவையிலிருந்து 2001 இல் ஓய்வு பெற்ற ஜெனரல் ஜானக பெரேரா பின்னர் ஆஸ்திரேலியாவிற்கான இலங்கையின் உயர்ஸ்தானிகராகவும், இந்தோனேசியாவுக்கான தூதுவராகவும் பணியாற்றினார்.

பின்னர், மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி அரசை எதிர்த்து ஐக்கிய தேசியக் கட்சியில் – அரசியல் களத்தில் – இறங்கினார். அவர் படுகொலை செய்யப்பட்ட போது, அவர் வட மத்திய மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவராகவும், முதலமைச்சர் பதவிக்கான முக்கிய போட்டியாளராகவும் இருந்தார். மாகாண சபைத் தேர்தலக ளுக்காக தீவிரமாக பிரச்சாரம் செய்தார்.

அநுராதபுரத்தில் உள்ள அவரது பிரசார அலுவலகத்தை ஒட்டி 2008 ஆம் ஆண்டு ஒக்டோபர் 6 ஆம் திகதி நடத்தப்பட்ட குண்டுத் தாக்குத லில் அவர் கொல்லப்பாட்டார். அது புலிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதல் என்று கருதப்பட்டது.

மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா, அவரது மனைவி வஜிரா பெரேரா மற்றும் 28 பேர் அந்தத் தாக்குதலில் உயிரிழந்தனர்.

இப்போது மேஜர் ஜெனரல் ஜானக பெரோவின் சகோதரரும் மருமகனும் கடந்த புதன்கிழமை காலை பொதுப் பாதுகாப்பு அமைச்சில் புதிய முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளனர்.

அவரது மரணத்தைச் சுற்றியுள்ள சூழ்நிலைகள் குறித்து கவலையும் சந்தேகமும் தெரிவித்த அவர்கள் இந்த விஷயத்தில் விரிவான, புதிய விசாரணைக்கு அழைப்பு விடுத்திருக்கின்றனர்.

அத்தோடு அந்தத் துயரச் சம்பவத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை உறுதி செய்வதில் தலையிடுமாறு கோரி, ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் அறிவிக்கவும் அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

அந்தச் செய்தியை வாசித்த போது எழுந்த மன ஓட்டங்களை இன்று வாசகர்களுடன் பகிர்ந்து கொண்டேன். அவ்வளவே.



# சாவைச் சந்திப்பதற்கு மனிதன் துணிய வேண்டும்

## தத்துவறிஞர் அன்ரன் பாலசிங்கம் தரும் விளக்கம்

**விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் 18 ஆவது நினைவு தினம் இன்றாகும்.**

**அவர் அரசியல் மதியூகி மட்டுமல்லர். தத்துவ அறிஞரும் கூட. ஆழமான தத்துவக் கட்டுரைகளை அழகு தமிழில் இலகு மொழியில் படைத்தவர். அதற்கு உதாரணமாக மனித வாழ்வு பற்றி "தனி மனித தத்துவம்" என்ற தலைப்பில் அவர் வரைந்த கட்டுரையின் ஒரு சிறிய பகுதி இன்று இங்கு பிரசுரமாகின்றது.**



வாழ்வு – இந்தக் காலம்தான் மனித இருப்பின் எல்லைக் கோட்டை இடுகிறது. இருத்தலின் எல்லைக்கு அப்பால் இல்லாமை இருக்கிறது. இல்லாமையை, அதாவது இருத்தலிலிருந்து இல்லாமல் போவதை, சாவு என்று சொல்கிறான் மனிதன்.

காலமும், நிலையாமையும், சாவும் மனித இருத்தலின் மெய்யுண்மைகள். இவை பற்றிய ஆழமான தரிசனத்தைத் தருகின்றனர் தத்துவவியல் அறிஞர்கள்.

இருப்பு என்பது காலத்தின் பாதையால் நடைபெறும் பயணம். இந்தப் பயணத்தில் நான் ஒரு கணமும் தரித்து நிற்க முடியாதவாறு காலம் என்னை நகர்த்திச் செல்கிறது. நான் காலத்தில் மிதந்து கொண்டு பயணிக்கிறேன். நடந்து முடிந்தது இறந்த காலமாகவும், நடக்கப் போவது எதிர்காலமாகவும், நடந்து கொண்டிருப்பது நிகழ்காலமாகவும் எனக்குத் தென்படுகிறது. இறந்த காலம் செத்துப்போனாலும், எனது அனுபவத்தின் நிழலாக அது என்னை சதா பின்தொடர்கிறது.

எனது வாழ்வனுபவம் எப்பொழுதுமே நிகழ்காலமாகவே கட்டவிழ்கிறது. எதிர்காலமானது, இறந்த காலமாக மாறும் நொடிப் பொழுதுகளாக நான் நிகழ்காலத்தை அனுபவிக்கிறேன்.

நிகழ்கால அனுபவமே நிதர்சனமானது. மெய்மையானது என்கிறார் தத்துவவியலாளர் கைடேகர். ஆனால் மனிதன் நிகழ்காலத்தில் வாழாமல், எதிர்காலம் பற்றியே சிந்திக்கிறான். மனித ஆசைகளும், எதிர்பார்ப்புகளும், திட்டங்களும், எதிர்காலத்தில் நிறுத்தப்பட்டிருப்பதால், மனித மனமானது எதிர்காலத்தை நோக்கியதாக, எதிர்காலத்தில் நிலைத்துப் போகிறது.

செத்துப் போன காலத்தில் புதையுண்டு போகாமலும், எதிர்காலத்தையே சதா எண்ணிக் கிடக்காமலும், நிகழ்காலத்தில் வாழ்வதுதான் அர்த்தபூர்வமானது.

காலத்தில் நிகழும் எனது பயணம் சாவுடன் முடிவடைகிறது.

நிலையற்ற இந்த உலகில், நிலையான ஒன்று உண்டு என்றால் அதுதான் சாவு. எனது உயிர்ப்பின் கணத்திலிருந்து சாவும் என்னோடு உடன்பிறப்பு எடுத்திருக்கிறது. எனது இருத்தலின் ஒவ்வொரு கணத்திலும் இல்லாமை என்ற சூன்யத்தை நான் எதிர்கொண்டு வாழ்கிறேன். எனது சாவை நான் பட்டறிந்து கொள்ள முடியாது. இந்த உலகில் அதுமட்டும் எனது அனுபவத்திற்கு அப்பாலானது. எனது அனுபவத்தின் முடிவாக, எனது இருத்தலின் முடிவாக, நான் இல்லாமல் போகும் இறுதிக் கணமாகச் சாவு என்னை எதிர்கொண்டு நிற்கிறது.

என்னைச் சூழ எங்கும் சாவு நிகழ்கிறது. மற்றவர்களது சாவை நான் நித்தமும் சந்திக்கிறேன். எனக்கு வேண்டியவர்கள், நான் பற்றுக் கொண்டவர்கள் மடியும் போது, துயரத்தின் சுமை என் ஆன்மாவை

அழுத்துகிறது. மனித இருப்பின் மிகவும் சோகமான, துன்பமான நிகழ்வாக சாவு சம்பவிக்கிறது.

எந்த நேரத்திலும், எந்தச் சூழ்நிலையிலும் நான் சற்றும் எதிர்பாராத சந்தர்ப்பத்தில், சாவு எனது கதவைத்

தட்டலாம். திடீரென, இருப்பிலிருந்து இல்லாமை என்ற சூன்யத்திற்குள் நான் தூக்கி வீசப்படலாம். எனது இருப்பின் நிலையாமை எனக்குத் தெரிந்தும், சாவின் நிச்சயத்துவத்தை நான் உணர்ந்தும், நான் அதுபற்றி சிந்திக்கத் துணிவதில்லை. மனித பயங்கள் எல்லாவற்றிற்கும் மூலபயமாக, தலையான பயமாக, மரண பயம் எனது ஆழ்மனக் குகைக்குள் ஒளிந்து கிடக்கிறது. நான் அதை அடக்கி, ஒடுக்கி, என் நனவு மனதிலிருந்து ஒதுக்கி வைத்திருக்கிறேன்.

சாவு என்பது மனித இருப்புநிலையின் தவிர்க்க முடியாத உண்மை என்கிறார் கைடேகர். அதை மறுப்பதும், அதற்கு அஞ்சுவதும், அதிலிருந்து ஓடி ஒளிந்து கொள்ள முயல்வதும் அபத்தமானது. சாவின் பிடியிலிருந்து எவருமே தப்பிவிட முடியாது. அது வாழ்வின் ஒரு நிகழ்வாக என்றோ ஒரு நாள் எதிர்கொள்ளப்பட வேண்டியது. சாவைச் சந்திப்பதற்கு மனிதன் துணிய வேண்டும். அந்தத் துணிவிலும் தெளிவிலும் விழிப்பிலுமே மனித வாழ்வு அர்த்தமுள்ளதாக, நிறைவானதாக அமையும் என்கிறார் கைடேகர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# புதிய முன்னுதாரணம்

சர்ச்சைக்குரிய 'கலாநிதி' பட்ட விவகாரத்தைத் தொடர்ந்து எழுந்த எதிர்ப்புக்களையடுத்து சபாநாயகர் அசோக சபுமல் ரன்வல தனது பதவியை நேற்று மாலை இராஜிநாமா செய்துள்ளார்.

இந்தச் சர்ச்சையை ஒட்டி சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைப்பதற்கு எதிரணிகள் தீர்மானித்து, நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது எதிரணி எம்.பிக்களின் ஒப்பத்தைப் பெறும் நடவடிக்கையை ஆரம்பித்திருந்த சூழ்நிலையில் -

ஒருவரின் தகுதி, தராதரம் எதுவாக இருந்தாலும், அவர் தவறு செய்யும் பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க அறிவித்துள்ள பின்னணியில் -

இந்த இராஜினாமா நடவடிக்கை இடம்பெற்றிருக்கின்றது.

இந்த நடவடிக்கை இதுவரை சபாநாயகராக இருந்த அசோக ரன்வலவுக்கு தனிப்பட்ட முறையில் பின்னடைவாகவும் பாதிப்பாகவும் அகௌரவமாக இருந்தாலும் கூட, புதிதாக ஆட்சி அமைத்திருக்கும் தேசிய மக்கள் சக்தி தரப்புக்கு அதன் கௌரவம், தனித்துவம், நேர்மை, மதிப்பு ஆகியவற்றிற்கு மாண்பாக அமையக்கூடிய ஒன்று என்பதை மறுப்பதற்கு இல்லை.

அசோக சபுமல் ரன்வலவைப் பொறுத்தவரை அவர் குறிப்பிடுகின்றமை போல, அவரின் கல்வித் தகுதியை உறுதிப்படுத்தத் தேவையான சில ஆவணங்கள் அவரிடம் கைவசம் இல்லாத சூழ்நிலையில், அவற்றை உரிய நிறுவனங்களிடம் பெற வேண்டிய பின்புலத்தில் தற்போது அந்த ஆவணங்களை விரைவாகச் சமர்ப்பிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது என்பது உண்மையானால், அது வரை விடயத்தை இழுத்தடிக்காது, தனக்கு விடப்பட்ட சவாலை பின்னால் எதிர்கொள்ளலாம், அதற்கு முன்னர் அரசுக்கு ஏற்படக் கூடிய நெருக்கடியைத் தவிர்ப்பதற்குத் தாம் பதவியை இராஜிநாமாச் செய்வது உசிதமானது என அவர் கருதியமை நல்ல முடிவு.

சர்ச்சைக்குரிய தமது பட்டம் குறித்து, பொதுவெளியில் கிளப்பப்பட்டுள்ள - அவருக்குத் தனிப்பட்ட முறையில் அவமதிப்பையும் அபகீர்த்தியையும் ஏற்படுத்தியுள்ள - விவகாரங்களுக்கு விரைந்து உரிய பதில் நடவடிக்கையை எடுப்பதன் மூலம் தமக்கு ஏற்பட்ட இழுக்குக்கு அவர் பரிகாரம் தேடிக் கொள்ள முடியும்.

எது, எப்படியென்றாலும், அரசியலில் எதிரிகளுக்கு அடிபணியக் கூடாது என்ற வீண் வீம்பில் பிடிவாதம் பிடித்து, அபவாதம் பண்ணாமல், நேர்மைத்தனத்துடன் நடவடிக்கை எடுத்த அசோக சபுமல் ரன்வலவும், அதற்கு வழிப்படுத்திய புதிய அரசும் மெச்சப்பட வேண்டிய தரப்புகளே.

உயிர்காப்புத் தடுப்பு மருந்துகள் என்ற பெயரில் தரமற்ற - சுகாதாரத் தகுதியற்ற - பொருள்களை பெரும் பண விரயம் மற்றும் நிதி மோசடி முறையில் இறக்குமதி செய்து, பெரும் ஊழல் துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டவர் எனக் குற்றம் சாட்டப்பட்ட அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்ட போது அதை எதிர்த்து வாக்களித்து, அந்த அமைச்சரை காபந்து பண்ண முயன்ற அரசுகளைத்தான் இது வரை காலமும் நமது நாடாளுமன்றம் கண்டு வந்திருக்கின்றது.

நமது நாட்டின் நாடாளுமன்றத்தில் பொய்யும் அபவாதமும் மோசடிகளும் தொடர்கதையாக நீடித்த காலத்தைத் தாண்டி, குற்றச்சாட்டுக்காக குறுகிய காலத்தில் பதவியை ராஜினாமா செய்யும் - அதுவும் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் அடுத்த நிலையில் இருக்கும் சபாநாயகர் பதவியை ராஜினாமாச் செய்யும் - ஒருமுறைமை இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படுவது இலங்கை அரசியலின் செல்நெறியில் ஒரு புதிய திருப்பமே. ஒரு புதிய முன்னுதாரணமே.

"நாட்டில் தவறு செய்யும் எவரையும் எக்காரணம் கொண்டும் பாதுகாக்க எமது அரசாங்கம் தயாரில்லை. நாட்டில் மட்டுமல்ல, எமது அரசாங்கத்திலும் எவரேனும் எந்த மட்டத்திலும் தவறு செய்தால் அந்தத் தவறுக்கு எதிராக நடவடிக்கை எடுகந்த் தயங்க மாட்டோம். சரியான நேரத்தில் இது தொடர்பாக சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க நாங்கள் தயங்க மாட்டோம்." - என்று கூறியிருக்கின்றார் புதிய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க.

சொல்லிலும் செயலிலும் அதை நிரூபித்துக் காட்டும் ஒரு தலைவர் என்பதை இப்போது அவர் நாட்டுக்கு உணர்த்தியிருக்கின்றார் என்று கொள்ளலாம்.




**கேள்வி : இன்றைய நிலையில், நீங்கள் சுமந்திரனாக இருந்தால் என்ன செய்வீர்கள்? சிறிதரனாக இருந்தால் என்ன செய்வீர்கள்? காரணம் கூறி விளக்குக!**

பதில் : நான், நானாக இருக்கத்தான் விரும்புவேன் என்பதுதான் எனது முதற் பதில். ஆனாலும் நீங்கள் கேட்டபடியால், இக் கேள்விக்குப் பதில் சொல்லுகிறேன்.

சுமந்திரனாக இருந்தால் இந்நேரம் அரசியலில் இருந்து ஓய்வு பெற்றிருப்பேன். காரணம், எனது பெறுமதி தெரியாதவர்களுக்காகப் பணி செய்தால், என் பணியும் இழிவு செய்யப்படும், நானும் இழிவு செய்யப்படுவேன் என்பதுவே!



சிறிதரனாக இருந்திருந்தால் - ஒன்று, உடன்படாத கட்சியை விட்டு விலகியிருப்பேன், அல்லது கட்சியை ஒன்றுபடுத்தி இருப்பேன். இரண்டும் செய்யாமல் உட்பகை வளர்ப்பதில் என் காலத்தை வீணாக்க மாட்டேன்.

××××××××

**கேள்வி : சபாநாயகர் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சனையைப் பற்றி என்ன**



**நினைக்கிறீர்கள்? (சபாநாயகர் ராஜினாமாச் செய்ய முன்னர் நேற்றுக் காலை எழுதப்பட்ட பதில் இது)**

பதில்: ஜே.வி.பி. அரசின் முதல் சறுக்கல். இந்தப் பிரச்சினையை இவ்வளவு தூரம் நீள விட்டிருக்கக் கூடாது. சீசரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவர் என்ற கதையெல்லாம் ஜனநாயகத்திற்கு ஒவ்வாது.

நடந்தது பிழை என்று தெரிந்தால், பாண்டியன் போல "கெடுக என் (பதவியின்) ஆயுள்" எனத் துறந்துவிட்டால் மதிப்பாவது மிஞ்சும்.

தூய்மை பற்றி அதிக நம்பிக்கை கொடுத்து விட்டார்கள். அதனால் சிறு பிழையும் பெரிதாய்த் தோன்றப் போகிறது.

××××××××

**கேள்வி : வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களைக் காண, நடிகர் விஜய் நேரில் வரவில்லையாமே?**



பதில் : மக்கள் வெள்ளம்போல் வந்தபோது மகிழ்ந்தவர், மக்களுக்குள் வெள்ளம் வந்தபோது உடன் இருந்திருக்க வேண்டும். அதுதான் நியாயம்.

××××××××

**கேள்வி : புதிய அரசாங்கம் மாவீரர் தினத்தைச் சுதந்திரமாகக் கொண்டாட அனுமதித்தது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

பதில் : பாராட்டத் தகுந்த பெரிய விசயம்தான்! முன்னைய அரசாங்கங்கள் இனவாதத்தால் ஊதிப் பெருப்பித்து வைத்திருந்த சாதாரண விடயத்தை, பருத்திருக்கும் பலூனை ஒரு குண்டூசியால் குத்தி உடைத்து எறிவது போல், மிகச் சாதாரணமாக "அனுமதி" எனும் ஊசியால் குத்தி உடைத்தெறிந்து விட்டது இந்த அரசாங்கம்.

இதில் வேடிக்கை என்னவென்றால், இந்த அனுமதியால் பேரினவாதிகள் துன்பப்படுகிறார்களோ இல்லையோ, நம்மவர்கள் சிலர்தான் பெரும் துன்பப்படுவதாய்த் தெரிகிறது.

இனத்திற்காய் ஒன்றுமே செய்யாமல் இருந்து

தொடர்ச்சி ▼

தொடர்ச்சி ▲

கொண்டு, பாராளுமன்றப் பதவிகளால் தாம் வாழ, மாவீரர் தினத்தைப் பயன்படுத்தி வந்த பல தலைவர்கள் பாடுதான் பெரும் சங்கடமாய்ப் போய்விட்டது.

ஏதோ ஒரு தமிழ் சினிமாவில் நடிகர் வடிவேலு ரவுடிகளைப் பிடிக்க வந்த பொலிஸ்காரரிடம் "நானும் ஒரு ரவுடிதான். என்னையும் ஜீப்பில் ஏற்றுங்கள்" என்று கெஞ்சுவார்.

அது போலத்தான், எத்தனையோ தியாகங்கள் செய்து இறந்த போராளிகளின் நினைவேந்தலில், வெறுமனே ஒரு விளக்கை மட்டும் ஏற்றிவிட்டு, இறந்த போராளிகளைவிடத் தாங்கள்தான் உயர்ந்த தியாகிகள் என்பதாய்க் காட்டிவந்த நம் தலைவர்களுக்கு, திடீரென அரசாங்கம் "கேற்"றைத் திறந்துவிட, என்ன செய்வதென்று தெரியாமற் போயிற்று.

அதனால், என்னென்னவோ சொல்லி, செய்து, வலியக் கொழுவப் பார்க்கிறார்கள். அவர்களைப் பார்க்கத்தான் பரிதாபமாக இருக்கிறது.

××××××××

**கேள்வி : வர்ணாச்சிரம தர்மம்தான் சாதிகளைக் கொணர்ந்து, மக்களைப் பிரித்தது என்று தமிழ் நாட்டு அரசியல்வாதிகள் சொல்லி வருகிறார்கள். அது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

பதில் : அதெல்லாம் பழைய கதை. இப்போது, சாதிகளை வைத்து மக்களைப் பிரிக்கும் செயலை, அங்குள்ள அரசியல்வாதிகள்தான் செய்து வருகிறார்கள். முடிந்தால், இக் கட்சிகள் முதலில், சாதி அடையாளங்களை விட்டு வெளியே வரட்டும். அதன் பிறகு, வர்ணாச்சிரம தர்மத்தைக் குற்றம் சாட்டலாம்.

××××××××

**கேள்வி : இலங்கை அரசவைக்குள் குரங்கு புகுந்து விட்டதாமே?**

பதில் : உண்மைதான்! அரசவைக்குள் புகுந்ததோடு மட்டும் அது நிற்கவில்லை. அந்த அரசவையையும் சிதைத்து, இலங்கையையும் சிதைத்த பிறகுதான் அது ஓய்ந்தது. நான் இராவணனின் அவைக்குள் புகுந்த அனுமானைப் பற்றித்தான் சொல்லுகிறேன். நீங்களும் அந்தக் குரங்கைப் பற்றித்தானே கேட்டீர்கள்?

××××××××

**கேள்வி : அமெரிக்க டொலருக்கு எதிராக, புதிய நாணயத்தை அறிமுகம் செய்தால், கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என, 'ட்ரம்ப்' எச்சரித்திருப்பது பற்றி... ?**

பதில் : வேகமாக வளர்ந்துவரும் நாடுகளின் முதல் எழுத்துக்களைக் கொண்டு குறிப்பிடப்படும் சுருக்கப் பெயரே பிரிக்ஸ் (BRICS) என்பதாகும். பிரேசில்,



ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகியவையே அந்த ஐந்து நாடுகள் ஆகும்.

இம்முறை தென்னாபிரிக்காவில் நடைபெற்ற "பிரிக்ஸ்" உச்சி மாநாட்டில் அமெரிக்க டொலரை முறியடிப்பதற்காய் "பிரிக்ஸ் நாணயத்தை" அறிமுகப்படுத்த 44 நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

இம் மாநாட்டில் இம் முறை ரஷ்ய அதிபர் "விளாடிமிர் புட்டின்" கலந்து கொள்ளவில்லை. ஆனாலும் இம் முயற்சியில் ரஷ்யாவின் அழுத்தமே அதிகமாய் இருப்பதாய்க் கருதப்படுகிறது. அறிமுகப்படுத்தப்படும் BRICS நாணயத்தை 44 நாடுகள் எதிர்காலத்தில் பயன்படுத்தும் என்று அது நம்புகிறது. இப்போதைக்கு இம் முயற்சி நூறு சதவீத வெற்றி அளிப்பதில் ஐயம் இருப்பதாகவே ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ரஷ்யா கெட்டித்தனமாய் அமெரிக்காவுக்குச் "செக்" வைத்திருக்கிறது என்பது மட்டும் உண்மை. அமெரிக்காவால் அழுத்தத்திற்கு ஆளாகும் நாடுகள், துணிந்து "பிரிக்ஸ்" மாநாட்டில் கைகோர்த்திருக்கின்றன. "ட்ரம்ப்"பிற்கு இது புதியதோர் தலையிடிதான்.

"பிரிக்ஸ்" மாநாட்டின் இந்த புதிய நாணயத்தாள் அறிமுக அறிவிப்பால், "ட்ரம்ப்" கொஞ்சம் ஆடித்தான் போயிருக்கிறார். மற்றைய நாடுகளுக்கு அவர் விடுத்திருக்கும் எச்சரிக்கை அதனைக் காட்டுகின்றது. இந்தியா, சீனா போன்ற நாடுகளின் முடிவில்தான் இம்முயற்சியின் வெற்றி தங்கியிருக்கப்போகிறது.

அரசியலில் "காசேதான் கடவுளடா" என்ற உண்மை வெளிப்படையானது. புதிய நாணயத்தாள் "பிரிக்ஸ்" அமைப்பால் அறிமுகப்படுத்தப்படுமானால், அமெரிக்கா சங்கடப்படப்போவது நிச்சயம். மூன்றாம் உலக யுத்தத்திற்கான, ஆயத்தம் தொடங்கி விட்டதன் அடையாளமாகவே, இப் பிரச்சினையைப் பார்க்க வேண்டியிருக்கிறது.

××××××××

**கேள்வி : சிக்கன நடவடிக்கை, இராணுவப் பிரதேசங்கள் விடுவிப்பு, மாவீரர் தினத்திற்கான அனுமதி என்பதான ஜனாதிபதியின் முன்னெடுப்புகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

பதில் : துணிந்த, பாராட்டுக்குரிய விடயங்கள்தான் என்பதில் எந்தவித ஐயத்திற்கும் இடமில்லை. ஆனால், இவையெல்லாம் பல ஆண்டுகளாகப் புரையோடிக்



கிடக்கும் இனப்பிரச்சினைப் புண்ணுக்கான மருந்துகளாகா என்பது மட்டும் நிச்சயம்.

தாழிதத்தில் போட்ட கறிவேப்பிலை போல, மேற்சொன்ன விடயங்கள் வாசம் கிளப்பி, ஈர்ப்பது என்னவோ உண்மைதான். ஆனால், அவை வாசத்திற்கு உதவுமே தவிர, பசிதீர்க்க உதவப் போவதில்லை.

பசி தீர்க்கக் கறிகள் சமைத்தாக வேண்டும். அதுதான் செய்யப்பட வேண்டிய முதல் வேலை. இப்போதைக்கு அடுப்பில் சட்டியேனும் ஏற்றப்பட்டதாய்த் தெரியவில்லை. தீர்வுத் திட்டம் எனும் சட்டியை, மக்கள்மன்று எனும் அடுப்பில் ஏற்றி, அதனுள், அனைத்து இனத்தாரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய சட்ட வரைவுகள் எனும், காய்கறிகளைப் போட்டு, கறி, அரை அவியலாகப் போகாமலும், அடிப்பிடித்து விடாமலும் இருக்கத்தக்கதாகப் பக்குவமாய் இறக்கப்பட்ட பிறகுதான், தாழிதத்தின் பயன்பாடு பற்றிப் பாராட்டுரைக்கலாம்.

வெறும் தாழிதத்தைப் பாராட்டி என்ன பயன்? துணிவோடு செயற்பட்டு வரும் ஜனாதிபதி விரைவாகக் கறி சமைத்து, அனைவரது பசியையும் தீர்த்து வைப்பார் என நம்புவோமாக!

××××××××

தொடர்ச்சி ▼

தொடர்ச்சி ▲

**கேள்வி : ஜே.வி.பி கட்சிக்கு, நமது யாழ் மக்கள் மூன்று தேர்தல் “சீற்று“களை அள்ளிக் கொடுத்திருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

பதில் : கையேகிக்கு, “குட்டிப் புழுகத்தில்“ தசரதன் இரண்டு வரங்களைக் கொடுத்ததாக இராமாயணம் சொல்கிறது. நமது யாழ் மக்கள் தசரதனுக்கு ஒரு படிமேலே போய் ஜே.வி.பி.க்கு மூன்று வரங்களைக் கொடுத்திருக்கிறார்கள்.

வரையறை இல்லாமல் கொடுக்கப்படும் வரங்கள் எல்லாமே, துன்பத்தை விளைவிக்க வாய்ப்பிருக் கிறது. தரசதனும், கைகேயியை நம்பித்தான் வரங்கள் கொடுத்தான். கைகேயியும் நல்லவளாய் இருந்துதான் வரங்களைப் பெற்றுக் கொண்டாள்.

இடையில் வந்த கூனியாற்தான், எல்லாம் தலை கீழாய் மாறிப்போயிற்று. வரம் கொடுக்கும் போது, கைகேயி தீயவளாய் மாறுவாள் எனத் தசரதன் கிஞ்சித் தும் நினைக்கவில்லை. வரத்தைப் பெற்றபோது, கைகேயியும் இந்த வரங்களை, தான் இப்படித்தான் பயன்படுத்தப்போகிறேன் என நினைத்திருக்கமாட் டாள். இடையில் வந்த கூனி செய்த சூழ்ச்சி, அத்தனை பேர் நம்பிக்கையையும் அசைத்துப் போட்டுவிட்டது.

இலங்கையிலும் கூனிகளுக்குப் பஞ்சமில்லை. அந்தக் கூனிகளின், வஞ்சனைகளுக்கு, ஜனாதி பதியாகிய கையேகி அசைந்து கொடுக்காமல் இருக்க வேண்டும். அசைந்து கொடுத்தாலோ, வரம் கொடுத்த தசரதனான நம் மக்கள் வான் ஏக, நம் புதிய தலை முறை, இராமன்கள் மீண்டும் கான் ஏக வேண்டி வந்தாலும் வந்துவிடும்.

நமது, தசரதனார் அவசரப்பட்டுக் கொடுத்த வரங்களை, புதிய கையேகி சரிவரப் பயன்படுத் தினால், நாடு உய்யும். மாறி நடந்தாலோ நாடு “பிய்யும்”. என்ன நடக்கிறதென்று பொறுத்திருந்து பார்ப்போம்.

××××××××

**கேள்வி : சிக்கன நடவடிக்கைகளால் மட்டும் ஒரு தேசத்தின் பொருளாதா ரத்தை நிமிர்த்திவிடலாம் என்று நீங்கள் நம்புகிறீர்களா?**

பதில் : இல்லை! நாட்டை நிமிர்த்த அதுமட்டும் போதாது என்றுதான் தோன்றுகின்றது. ஆனால் ஒன்று, சிக்கன நடவடிக்கைகளால் வீழ்ந்த பொருளா தாரத்தை முழுமையாய் நிமிர்த்த முடியாவிட்டாலும், மேலும் அந்த வீழ்ச்சி பாதாளம் நோக்கிச் செல்லா மல் பார்த்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

“ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை போகாறு அகலாக் கடை“ என்கிறார் திருவள்ளுவர். வருமா–னம் வருகின்ற வழியானது சிறிதாக இருந்தாலும், அது செலவாகிப் போகும் வழியானது விரியாதிருந்–தால், அரசனுக்குக் கேடில்லை என்பது இக் குறளின் பொருள்.

வள்ளுவர் இக் குறளில் வரவை விடச் செலவு குறைந்தால் கேடில்லை என்கிறாரே தவிர, அதுவே ஒரு நாட்டின் வளர்ச்சிக்குப் போதும் என்று உரைக்க வில்லை என்பதனை நாம் கவனித்தாக வேண் டும்.

# கார்த்திகை தீபம் ஏற்றுவோம் வாரீர்...!



மாலயன் மருளது போக்கிய காலம்
மலரடி திருமுடி உணர்த்திய காலம்
தேவரும் தெரிசனம் கண்டநற் காலம்
திருவிளக் கேற்றிடும் கார்த்திகைக் காலம்

கந்தனை வந்தனை செய்திடு காலம்
கனற்பொறி குழந்தையாய் ஆகிய காலம்
நொந்திடு அடியவர் பவவினை போக்கிட
செந்திரு விளக்கதை ஏற்றிடும் காலம்

ஒளிர்வளர் விளக்காய் ஒளிர்ந்திடும் காலம்
தெளிவதைக் கருத்தி லமர்த்திடும் காலம்
பொலிவுடன் பேரொளி தோன்றிய காலம்
போற்றியே தீபத்தை ஏற்றுவோம் வாரீர்

ஆண்டவன் நினைப்பை அகற்றிய ஆணவம்
தாண்டவம் தகர்ந்த தகைவுடைக் காலம்
நீண்டிடும் மாயையை நிர்மல மாக்கிய
நிலைபெறு சக்தியை உணர்த்திய காலம்

நெறிபிறள் நினைப்பை நீக்கிய காலம்
அறிவெனும் உண்மையை அமர்த்திய காலம்
பொறிபுலன் சிவனருள் புகுத்திய காலம்
போற்றிடும் கார்த்திகை பொன்னிகர் காலம்

ஆலயம் எங்கணும் தீபங்கள் ஒளிரும்
அனைவரும் தீபத்தை நாடியே நிற்பார்
வீதிகள் வீடுகள் ஒளியினை நல்கும்
விளக்குகள் ஏற்றிடும் சிறப்புடைக் காலம்

ஒளியிலே இறையினை இருத்திடும் காலம்
உவப்புடன் தீபத்தை ஏற்றிடும் காலம்
மனவிருள் போக்கிட வந்திட்ட காலம்
மண்ணிலே மலர்திட்ட மாண்புடைக் காலம்

அண்ணா மலையினை அகத்தில் அமர்த்திட
உண்ணா முலையான் ஒளிர்ந்திட்ட காலம்
அருட் பெரும்ஜோதி தனிப்பெருங் கருணை
அளவிலா ஆற்றலை அருளிய காலம்

மரத்தில் மறைந்த மாமத யானையை
பரத்தில் மறைந்த பார்முதல் பூதத்தை
இருத்தி மனத்தில் ஏற்றுவார் தீபத்தை
கொளுத்துவார் சொக்கப் பனையைக் கோவிலில்

மாதொரு பாகனை மனமதில் இருத்தி
மங்கலம் பொங்கிட தீபத்தை யேற்றி
தீமைகள் அகல கார்த்திகை விளக்கை
சிறப்புடன் ஏற்றிடச் சேருவோம் வாரீர்!

விஞ்ஞான உண்மை விளக்கினில் இருக்கு
மெஞ்ஞானம் அதனுள் வியாபித்தே இருக்கு
ஒளியினை அறிவாய் கொண்டிடும் வேளை
ஒளியினை உணர்வாய் ஆக்கிடும் சமயம்

இருளது சூழின் எதுவுமே தெரியா
இருளது இருப்பு மருளவே வைக்கும்
ஒளியது வந்தால் தெளிவது பிறக்கும்
தெளிவது சிவமாய் ஒளியென ஒளிரும்


அகமதில் இருளை அகற்றிட வேண்டும்
அருளெனும் ஒளியை இருத்திட வேண்டும்
அருளெனும் ஒளியை அளிப்பது இறையே
இறையினை எண்ணி ஏற்றுவோம் விளக்கை

கார்த்திகை தீபம் ஏற்றும் வாரீர்
கந்தனை சிந்தையில் இருத்துவோம் நாளும்
ஊற்றிடும் எண்ணையாய் ஆகுவோம் நாங்கள்
உணர்விலே பக்தியை இருத்தியே வாழுவோம்!

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,
மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.



# திருக்கார்த்திகை தீபம்!



வித்தகர் விபுலமாமணி
வி.ரி.சகாதேவராஜா
காரைதீவு நிருபர்

கார்த்திகை தீபம் தமிழர்களின் பழமையான பண்டிகையாகும். சிவ பெருமானை ஆராதிப்பதற்காகவும், அவரிடமிருந்து ஆசிகள் பெறுவதற்காக இவ்விரதத்தை அனுஸ்டிக்கிறோம். கூடவே முருகப் பெருமானின் அருளும் கிடைக்கும்.

குமாராலய தீபம் நேற்று வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டது. இன்று சனிக்கிழமை சர்வாலய தீபம் கொண்டாடப்படுகிறது. நேற்றும் இன்றும் வீடுகளிலும் தீபம் ஏற்றி கொண்டாடப்படுகிறது.

இதைப் பற்றி அகநானூறு போன்ற நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கார்த்திகை தீபத்திருநாள் மிகவும் பிரபலமாக திருவண்ணாமலையில் கொண்டாடப்படுகிறது.

கார்த்திகை மாதத்தில் கிருத்திகை நட்சத்திரமும், பௌர்ணமியும் இணைந்து வரும் நாளில் தீபம் ஏற்றுவது வழக்கமாகும்.

ஆனால், இம்முறை அது அடுத்தடுத்த நாள்களில் வருகிறது.



கிருத்திகை நட்சத்திரம் வெள்ளிக்கிழமையும் பௌர்ணமி சனிக்கிழமையும் வருகிறது.

எனவே கிருத்திகை நட்சத்திரம் வரும் வெள்ளிக்கிழமை இந்த திருநாளில் மக்கள் வீடுகளில் தீபம் ஏற்றி ஒளிரச் செய்வார்கள்.

கிருத்திகை வருவதால் இந்த நாளில் சரியாக மாலை 6 மணிக்கு வீடுகளில் தீபம் ஏற்றுவது சிறப்பு.

இன்று சனிக்கிழமை பௌர்ணமி நாளாகும். இன்று தீபம் ஏற்றி கொண்டாடப்படுகிறது.

வீட்டில் பயன்படுத்தும் காமாட்சி விளக்கை முதல் நாளே நன்கு சுத்தம் செய்து வைத்துக்கொள்வது நல்லதாகும்.

ஸ்ரீ அண்ணாமலையார் அருள்புரியும் திருவண்ணாமலையில் மாலை ஆறு மணிக்கு பிரம்மாண்டமான தீபம் ஏற்றப்படுகிறது.

இது சிவபெருமானின் அருளை பிரதிபலிக்கிறது. இந்த நிகழ்வைக் காண பல லட்சக் கணக்கான பக்தர்கள் திருவண்ணாமலையில் வந்து கூடியிருப்பார்கள். பக்தர்கள் இந்த தெய்வீக தீபத்தைக் காண்பதன் மூலம் சிவபெருமானை தாங்கள் அருகிலேயே தரிசிப்பதாக உணர்ந்து அவர் அருளைப் பெறுகிறார்கள்.

**ஐதீகக்கதை**

ஒரு சமயம் மகாவிஷ்ணு, பிரம்மா இருவரும் சிவபெருமானின் அடி, முடியைத் தேடிச்சென்று அதைக் காண முடியாமல் தங்கள் தோல்வியை ஏற்றுக்கொள்கின்றனர்.

அப்போது மகாவிஷ்ணு, பிரம்மா இருவருக்கும் சிவபெருமான் ஒளிப்பிழம்பாய் காட்சியளித்தார். தாங்கள் கண்ட காட்சியை உலக மக்களுக்கும் காட்டி அருள வேண்டும் என்று இருவரும் கேட்டுக்கொள்ள, திருக்கார்த்திகை நாளன்று சிவபெருமான் பக்தர்களுக்கு ஒளிப்பிழம்பாய் ஜோதி வடிவில் காட்சியளிப்பதாக ஐதீகம்.

**நடைமுறை**

வாசலின் இருமுனைகளில் வைக்கப்படும் இரு விளக்குகள் மட்டும் புதிதாக இருக்க வேண்டியது அவசியமாகும். மற்ற இடங்களில் பழைய விளக்கைப் பயன்படுத்தலாம் தவறில்லை. ஆனால், விளக்குகளை முதல் நாளே சுத்தம் செய்து வைக்க வேண்டும். தீபத் திருநாள் அன்று விளக்குகளை கழுவுவது சரியான முறையல்ல. சிலர் வாசலில் குத்துவிளக்கு ஏற்றுவார்கள். அவ்வாறு குத்துவிளக்கைப் பயன்படுத்தும்போது அழகாக கோலமிட்டு அதன் நடுவில் வைப்பதே சிறந்ததாகும்.

விளக்கில் நெய், நல்லெண்ணெய், பஞ்சதீப எண்ணெய் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை பயன்படுத்தலாம். வீட்டில் மொத்தம் 27 தீபங்கள் ஏற்ற வேண்டும். முதலில் வாசல் படியில் தீபமேற்றிய பிறகே வீட்டினுள் தீபத்தை எடுத்து வந்து வைக்க வேண்டும். பூஜையறையில் தீபமேற்றி எடுத்துச் செல்லக்கூடாது. அந்த தீபம் குறைந்தது 30 நிமிடங்களாவது எரிய வேண்டியது அவசியமாகும்.





# திருவண்ணாமலையில் மகா தீபம் ஏற்றப்பட்டது

திருவண்ணாமலை கார்த்திகை மகா தீபத் திருவிழாவை யொட்டி, நேற்று வெள்ளிக் கிழமை மாலை 6 மணிக்கு 2,668 அடி உயர மலை மீது விண்ணைப் பிளக்கும் அரோகரா முழக்கங்களுடன் மகா தீபம் ஏற்றப்பட்டது.

மகா தீபத்தை காண்பதற்காக கோவிலில் லட்சக்கணக்கான பக்தர்கள் குவிந்தனர். மலை உச்சியில் மகா தீபம் ஏற்றப் பட்டபோது பக்தர்கள் சிவ முழக்கம் எழுப்பி தரிசனம் தரிச னம் செய்தனர்.

திருவண்ணாமலை, அருணாசலேஸ்வரர் கோவிலில் கடந்த, 4 ஆம் திகதி தீப திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது. கடந்த வெள்ளிக் கிழமை அதிகாலை, 2.00 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டு அருணாசலேஸ்வரர், உண்ணாமுலையம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது. சுவாமி கருவறை எதிரில், சிவாச்சாரியார்கள் வேத மந்திரம் முழங்க, சிறப்பு யாக பூஜை நடைபெற்றது.

பின்னர், “ஏகன் அனேகன்” என்ற தத்துவத்தை விளக்கி, பஞ்ச பூதங்களை குறிக்கும் வகையில், சுவாமிக்கு ஏற்றப் பட்ட கற்பூர தீபத்திலிருந்து, ஒரு மடக்கில் நெய் தீப விளக்கு ஏற்றப்பட்டு, அதை கொண்டு ஐந்து மடக்குகளில் தீபம் ஏற்றப்பட்டு, அதிகாலை பரணி தீபம் ஏற்றப்பட்டது. பின்னர் பரணி தீபத்தை, கையில் ஏந்தியவாறு எடுத்து சென்று, அம் மன் சன்னதி உள்ளிட்ட கோவிலில் உள்ள அனைத்து சன்னதிகளிலும் பரணி தீபம் ஏற்றப்பட்டது.

பார்வதி அம்மனுக்கு சிவபெருமான் இடபாகம் அளித் ததை நினைவு கூறும் வகையில், அர்த்தநாரீஸ்வரராய் கோவிலினுள் இருந்து மலையை நோக்கி பார்த்தபடி நேற்று வெள்ளிக் கிழமை மாலை 5. 59 மணிக்கு வெளிவர காலை யில் ஏற்றப்பட்ட பரணி தீப விளக்கிலிருந்து, கோவில் கொடி மரம் எதிரில் உள்ள அகண்ட தீபத்தில், தீபம் ஏற்றப்பட்டு அதிலிருந்து பஞ்ச பூதங்களை குறிக்கும் வகையில், ஐந்து தீப்பந்த ஜோதி ஏற்றப்பட்டு, 2,668 அடி உயர மலை உச்சி யில் உள்ளவர்களுக்கு தெரியும்படி காட்டப்பட்டது.

அதே நேரத்தில், மலை உச்சியில் மஹா தீபம் ஏற்றப் பட்டது. அப்போது பக்தர்கள், “அண்ணாமலையாருக்கு அரோகரா“ என, பக்தி பரவச கோஷமிட்டு வழிபட்டனர். திருவண்ணாமலையில் குவிந்த, பல லட்சக்கணக்கான பக்தர்கள், மஹா தீபத்தை தரிசித்து கிரிவலம் சென்றனர். இந்த மஹா தீபம், 11 நாள்கள் எரியும், இவை, 40 கிலோ மீற்றர் தூரம் வரை தெரியும்.

பஞ்சமூர்த்திகள் அலங்கரிக்கப்பட்ட பல்லக்குகளில் சன்னிதி யில் இருந்து புறப்பட்டு கொடிமரம் முன்பு அமைந்துள்ள தீபத் தரிசன மண்டபத்தில் எழுந்தருளினர்.

சன்னிதியில் இருந்து அர்த்தநாரீஸ்வரர் வெளிவந்து ஆனந்தத் தாண்டவத்துடன் கொடி மரத்தை வலம் வந்து மீண்டும் சன்னிதிக்குள் திரும்பும் காட்சியைப் பக்தர்கள் பரவசத்துடன் தரிசித்தனர்.

நினைத்தாலே முக்தி தரும் திருவண்ணாமலையில் காணும் இடமெல்லாம் பக்தர்கள் வெள்ளமாக காட்சியளித்துள் ளது. பக்தர்களின் பாதுகாப்புக் கருதி ஆயிரக்கணக்கான பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.












# உலக சதுரங்க சாம்பியன் குகேஷ்க்கு தமிழக அரசால் 5 கோடி ரூபா பரிசு

உலக சதுரங்க சாம்பியன்ஷிப் தொடரில் தமிழக வீரர் குகேஷ், நடப்பு சாம்பியன் டிங் லிரெனை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.


இதன் மூலம் 18 வயதிலேயே உலக சதுரங்க சாம்பிய னாகி குகேஷ் வரலாறு படைத்துள்ளார்.

14 ஆவது சுற்றில் அற்புதமாக விளையாடிய குகேஷ் 58 ஆவது நகர்த்தலில் நடப்பு சாம்பியன் டிங் லிரெனை வீழ்த்தினார்.

இதன் மூலம் விஸ்வநாதன் ஆனந்த்துக்குப் பிறகு உலக சதுரங்க சாம்பியன்ஷிப் பட்டம் வெல்லும் இரண்டவது தமி ழக வீரர் என்ற பெருமையை குகேஷ் பெற்றுள்ளார்.

இந்நிலையில், உலக சதுரங்க சாம்பியன் குகேஷ்க்கு 5 கோடி ரூபா பரிசுத் தொகையை தமிழக முதல்வர் மு.க.ஸ்டா லின் அறிவித்துள்ளார்.

# நடிகர் அல்லு அர்ஜுன் கைது!



நடிகர் அல்லு அர்ஜுனை ஹைதராபாத் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹைதராபாத்தில் உள்ள சந்தியா திரையரங்கில் புஷ்பா 2 திரையிடலின் போது ஏற்பட்ட சன நெரிசலில் சிக்கி பெண் ஒருவர் உயிரிழந்த வழக்கிலேயே அவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த திரைப் படத்தின் முதல் நாள் முதல் காட்சியைப் பார்வையிட நடிகர் அல்லு அர்ஜ/ன், கடந்த 4 ஆம் திகதி ஹைதராபாத்தில் உள்ள சந்தியா திரையரங்கிற்கு சென்றி ருந்தார்.

எந்த ஒரு முன் அறிவிப்பும் இன்றி அல்லு அர்ஜுன் சென்றதால், அவரை காண்பதற்கு இரசிகர்கள் கூட்டம் அலைமோதியது.

இதனால் ஏற்பட்ட நெரிசலில் சிக்கிய 39 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்தார்.

அதே நேரத்தில் அவரது 8 வயது மகனும் சிறு காயங் களுக்கு உள்ளான நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

பெண்ணின் குடும்பத்தினர் அளித்த முறைப்பாட்டுக்கு அமைவாக அல்லு அர்ஜ/ன், அவரது பாதுகாப்புக் குழுவினர் மற்றும் திரையரங்கு நிர்வாகம் மீது பொலிஸார் கடந்த 5 ஆம் திகதி வழக்குப் பதிவு செய்தனர்.

இதற்கமைய அவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அல்லு அர்ஜுன் திரையரங்கிற்கு வருகை தருவது முன்னதா கவே தெரிந்திருந்தால் மேலதிக பாதுகாப்பு வழங்கப்பட்டு ஏற்பட்ட உயிரிழப்பினை தவிர்த்திருக்க முடியும் என பொலி ஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.




# நெடுஞ்சாலையில் சென்ற கார்களில் மோதி விபத்துக்குள்ளானது அமெரிக்க விமானம்!

அமெரிக்காவில் சிறிய ரக விமானம் ஒன்று நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த கார்கள் மீது மோதி இரண்டாக முறிந்து விபத்திற்குள்ளாகியுள்ளது.

தெற்கு டெக்சாஸின் விக்டோரியாவில் உள்ள ஸ்டேட் ஹைவே லூப் நெடுஞ்சாலையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நெடுஞ்சாலைக்கு மேல் தாழ்வாகப் பறந்து கொண்டிருந்த மேற்படி விமானம் திடீரென நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த கார்கள் மீது மோதி கீழே விழுந்து இரண்டாக முறிந்தது.

இந்த விபத்தில் காரில் பயணித்த 4 பேர் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

விபத்து தொடர்பான காணொலி இணையத்தில் வைரலாகி வருகின்றது.












# சூடானில் தீவிரமடையும் உள்நாட்டு கலவரம் இராணுவத் தாக்குதலில் 127 பேர் உயிரிழப்பு!

சூடானில் உள்நாட்டு கலவரம் நீடித்து வரும் நிலையில், துணை இராணுவப்படை வீரர்களின் முகாம்கள் மீது குண்டு வீசப்பட்டுள்ளது. இந்தக் குண்டு வீச்சில் 127 பேர் உயிரிழந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஆபிரிக்கநாடானசூடானில்கடந்த2021ஆம்ஆண்டுஇராணுவம்ஆட்சியைக்கைப்பற்றியது. இராணுவதளபதியானஜெனரல் படக் அல்-பர்ஹன் அங்கு ஆட்சியை நடத்தி வருகிறார்.

துணை இராணுவ படைப்பிரிவுகளில் ஒன்றான அதிவிரைவு ஆதரவு படையினரை இராணுவத்துடன் இணைக்க இராணுவ தளபதி ஜெனரல் படக் அல்- பர்ஹன் முயற்சி மேற்கொண்டார்.

இதற்கு துணை இராணுவ படையின் அதிவிரைவு ஆதரவுபடையினர் தரப்பில் எதிர்ப்பு கிளம்பியது. இதனால் இராணுவத்திற்கும் துணை இராணுவத்திற்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

2022 ஆம் ஆண்டு முதல் உள்நாட்டு போராக மாறி கடுமையான சண்டை நடைபெற்று வருகிறது. சுமார் 2 ஆண்டுகளாகநீடித்துவரும்இந்தபோரில்பல்லாயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

அங்குள்ள கிராமங்களை துணை இராணுவ படை வீரர்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து இராணுவ ஆட்சியினைக் கவிழ்க்க சதிசெய்து வருகின்றனர்.

இந்த நிலையில் துணை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள கிராமங்களை குறிவைத்து இராணுவத்தினர் தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலில் பொதுமக்கள் உட்பட 127 பேர் உயிரிழந்துள்ளனர். இதற்கு துணை இராணுவம் பதிலடி கொடுக்கும் என்பதால் உள்நாட்டு போர் தீவிரம் அடையும் என தெரிவிக்கப்படுகிறது.

# ஜோர்டானிலுள்ள முதியோர் இல்லத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 6 பேர் பலி




ஜோர்டானிலுள்ள முதியோர் இல்லமொன்றில் நேற்று அதிகாலை ஏற்பட்ட தீவிபத்தில் சிக்கி 6 பேர் உயிரிழந்துள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

அந்நாட்டின் தலைநகரான அம்மானிலுள்ள தனியாருக்குச் சொந்தமான முதியோர் இல்லமொன்றிலேயே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது, முதியோர் இல்லத்தில் சுமார் 111 முதியவர்கள் வசித்து வந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த இல்லத்தின் முதல் தளத்திலேயே திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளதாகவும், இதில் 6 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 55 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் காயமடைந்தவர்களில் 5 பேரின் நிலை கவலைகிடமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தீவிபத்துக்கான காரணம் இது வரை வெளிவராத நிலையில், இது குறித்த தீவிர விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.








# வவுனியா முருகன் ஆலயங்களில் குமராலாய தீபம் ஏற்றி வழிபாடு

(கி.வசந்தன்)

வவுனியாவில் முருகன் ஆலயங்களில் நேற்று மாலை குமராலாய தீபம் ஏற்றி விசேட வழிபாடுகள் இடம்பெற்றன.

கார்த்திகை மாதத்தில் வருகின்ற கார்த்திகை நாள் ஏனைய கார்த்திகை நாள்களை விடவும் விமரிசையாக தமிழர்களால் கொண்டாடப்பட்டு வருகின்ற ஒரு விழா. மாலை வேளையில் வீடுகளின் வெளிப்புறங்களிலும், வீட்டு முற்றத்திலும் விளக்கேற்றிக் கொண்டாடுவார்கள். திருக்கார்த்திகை தினத்தன்று ஆலயங்களில் தீபத்திருவிழா நடைபெறும். கார்த்திகை விழாவை குமராலாய தீபம், சர்வாலய தீபம், விஷ்ணுவாலய தீபம் என மூன்றாக ஆலயங்களிலும் வீடுகளிலும் கொண்டாடுவர்.

அந்தவகையில் இன்றைய தினம் கார்த்திகை தீபம் ஏற்றப்படவுள்ள நிலையில் குமராலாய தீபம் இந்து சமய முறைப்படி நேற்று ஏற்றி வைக்கப்பட்டது. வவுனியாவில் உள்ள பல முருகன் ஆலயங்களில் இவ் குமராலய தீபம் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

குறிப்பாக வவுனியா கந்தசாமி ஆலயத்தில் சிவசிறி பிரபாகரக் குருக்கள் தலைமையில் பல நூற்றுக்கணக்கான பக்தர்களின் வழிபாட்டுக்கு மத்தியில் விசேட அபிடேக, பூஜை வழிபாடுகளின் பின் குமாரலய தீபம் ஏற்றப்பட்டது. ஆலயத்தின் முன்பாக அலங்கரிக்கப்பட்ட சொக்கப்பானையில் தீபம் ஏற்றி வழிப்பட்டனர். இதனைத் தொடர்ந்து சாமி வெளி வீதி வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.










# செம்மலை, நாயாறில் நேற்றுக் கனிய மணல் அகழ்வு முயற்சி ரவிகரன் தலைமையிலான எதிர்ப்பினால் கைவிடப்பட்டது!

(பா.சதீசன்)

முல்லைத்தீவு – செம்மலை, நாயாறு உள்ளிட்ட இடங்களில் மிட்வெஸ்ட் ஹெவி சாண்ட்ஸ் பிறைவேட் லிமிடட் எனும் நிறுவனம் இல்மனைட் அகழ்விற்கு எடுத்த முயற்சி, வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும், அப்பகுதி மக்களின் கடுமையான எதிர்ப்பால் நேற்றுத் தடுத்து நிறுத்தப்பட்டது.

மக்களுடைய அனுமதியின்றி, அத்துமீறி எமது இடங்களில் கனியமணல் அகழ்வு மேற்கொள்ள முடியாதெனவும், உடனடியாக இந்த அகழ்வு முயற்சிகளைக் கைவிட்டு அங்கிருந்து வெளியேறுமாறும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மற்றும் பொதுமக்கள் தமது கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டனர்.

ஏற்கனவே கொக்கிளாய் பகுதியில், அப்பகுதி மக்கள் இடப்பெயர்வைச் சந்தித்திருந்தபோது, மக்களுக்குரிய சுமார் 44ஏக்கர் வயல் காணிகளை அத்துமீறி அபகரித்து, அங்கு கனிய மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டிருப்பதை நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் சுட்டிக்காட்டினார். அந்த இடங்கள் மீள் நிரப்பப்படாமல் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன எனவுன், அங்கு கடலரிப்பு அபாயம் ஏற்பட்டிருப்பதாக மக்கள் தம்மிடம் முறையீடு செய்துள்ளனர் எனவுன் அவர் இதன்போது தெரிவித்தார்.

இந்நிலையில் தற்போது செம்மலை, நாயாறு உள்ளிட்ட இடங்களில் கனியமணல் அகழ்வதாலும், செம்மலையில் அமைக்கப்பட்டுள்ள உவர்நீர் தடுப்பணை பாதிக்கப்பட்டு பாரிய அனர்த்தங்கள் ஏற்பட வாய்ப்பிருப்பதையும், மக்களின் வயல் நிலங்கள், குடியிருப்புக்கள் இதனால் பாதிக்கப்படும் என்பதையும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இதன்போது சுட்டிக் காட்டினார்.

எனவே மக்களுக்கு பாதகமான இந்த கனியமணல் அகழ்வை ஏற்றுக்கொள்ளமுடியாதெனவும் தனது கடுமையான எதிர்ப்பை அவர் வெளியிட்டார்.

மேலும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவின் அனுமதியில்லாமல் – இப்பகுதி மக்களின் அனுமதியில்லாமல் – எவ்வாறு இங்கு கனியமணல் அகழ்வதற்கு வருகைதர முடியும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் இதன் போது கேள்வி எழுப்பியமையுடன், உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறும் தெரிவித்திருந்தார்.

இந் நிலையில் கனியமணல் அகழ்விற்குரிய முதற்கட்ட செயற்பாடுகளுக்கு வருகைதந்த மிட்வெஸ்ட் ஹெவி சாண்ட்ஸ் பிறைவேட் லிமிடட் நிறுவனத்தினர் அங்கிருந்து வெளியேறினர்.

குறித்த எதிர்ப்பு நடவடிக்கையில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் சிங்கராசா பிரதாஸ், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் இளையதம்பி தணிகாசலம், நாயாறு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கப் பிரதிநிதிகள், அப்பகுதி பொதுமக்கள் என பலரும் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



















# புதிய தவணை ஆரம்பமாக முன்பு பாடசாலை சீருடை துணியை வழங்கும்படி பணிப்புரை

பாடசாலைகளில் புதிய தவணை ஆரம்பிக்க முன்னர் மாணவர்களுக்கு பாடசாலை சீருடைகளை வழங்குமாறு பணிப்புரை விடுத்துள்ளதாக கல்வி அமைச்சு தெரிவிக்கின்றது.

வலயக் கல்வி அலுவலகங்களூடாக பாடசாலைகளுக்கு சீருடைகள் அனுப்பப்படவுள்ளன என அமைச்சின் செயலாளர் நாலக களுவெவ தெரிவித்துள்ளார்.

2025 ஆம் ஆண்டுக்கான பாடசாலை சீருடைகளுக்காக 11,817 மில்லியன் மீற்றர் துணி தேவைப்படுகின்றது.

அடுத்த வருடத்தில் 46,40,086 மாணவர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட வேண்டும்.

2025 ஆம் ஆண்டிற்கான பாடசாலை சீருடைகளுக்கான முழுத் தொகை துணியையும் அன்பளிப்பாக வழங்க சீன மக்கள் குடியரசு முன்வந்துள்ளது.

இந்த சீருடை துணிகள் 3 தொகுதிகளாக இலங்கையை வந்தடையவுள்ளதுடன், முதல் மற்றும் இரண்டாம் கட்ட தொகுதிகள் ஏற்கனவே இலங்கையை வந்தடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 150 அடிப் பள்ளத்தில் வீழ்ந்த டிப்பர் வாகனம்

## சாரதியும் உதவியாளரும் படுகாயம்



(க.கிஷாந்தன்)

மஸ்கெலியாவில் இருந்து ஹங்குராங்கெத்த பகுதியை நோக்கி சென்ற டிப்பர் ரக வாகனமொன்று வீதியை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்ததில் சாரதி மற்றும் உதவியாளர் படுகாயமடைந்துள்ளனர்.

மஸ்கெலியாவில் இருந்து ஹங்குராங்கெத்த நோக்கி சென்ற டிப்பர் ரக வாகனம் ஒன்று நேற்று 13ஆம் திகதி, நோர்டன்பிரிட்ஜ் கினிகத்தேன பிரதான வீதியின் தப்லோ ஹுலாங் வளைவு பகுதியில் சுமார் 150 அடி பள்ளத்தில் விழ்ந்ததில் டிப்பர் வாகனத்தின் சாரதியும், உதவியாளரும் படுகாயமடைந்து நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என நோர்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்தனர்.

சாரதியின் கவனமின்மை காரணமாக இவ்விபத்து நேர்ந்துள்ளதாகவும், விபத்தில் டிப்பர் ரக வாகனம் பலத்த சேதமடைந்துள்ளதாகவும் விபத்துத் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் நோர்டன்பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி டிப்பர் ரக வாகனம் விபத்துக்குள்ளான அதே இடத்தில் கடந்த வருடம் சிவனொளிபாதமலைக்கு யாத்திரை சென்ற பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் பஸ்ஸில் பயணித்த மூன்று யாத்திரிகர்கள் உயிரிழந்தனர் என நோர்டன்பிரிட்ஜ் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



# கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு உறுப்பினர்கள் நியமனம்

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு உறுப்பினர்களை நியமித்துள்ளார்.

அதற்கமைவான நியமனக் கடிதங்கள் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் வழங்கி வைக்கப்பட்டன.

அதன்படி கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி ஹர்ஷ அமரசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

டெமியன் அமல் கப்ரால், மொஹான் ரே அபேவர்தன, சஞ்சய குலதுங்க மற்றும் கலாநிதி ஹர்ஷ சுபசிங்க ஆகியோர் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

# பிரதி சபாநாயகர் உட்பட மேலும் பலர் போலி பட்டங்களுடன் இருக்கின்றனர்

## முன்னாள் எம்.பி. பிரேம்நாம் சி தொலவத்த தகவல்



“சபாநாயகர் அசோக சப்புமல் ரன்வல மாத்திரமின்றி பிரதி சபாநாயகர் ரிஷ்வி சாலி, நகர அபிவிருத்தி அமைச்சர் அநுர கருணாதிலக, மின்சக்தி அமைச்சர் புண்ணியஸ்ரீ குமார ஜயக்கொடி, ஹர்ஷண சூரியப்பெரும, அனில் கயந்த, பிமல் ரத்நாயக்க மற்றும் எரங்க குணசேகர உள்ளிட்டோரது கல்வி தகைமைகள் பட்டங்கள் உண்மையானவையாய என்ற சந்தேகம் எழுந்துள்ளது.”

– இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாம் சி தொலவத்த தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“முந்தைய நாடாளுமன்றத்தில் சாதாரண தரத்தில் கூட சித்தி பெறாதவர்கள் இருந்த போதிலும், அவர்கள் அதனை மறைக்கவில்லை. தமது கல்வி தகைமைகள் தொடர்பில் மக்களிடம் பொய் கூறவில்லை.

நாடாளுமன்றத்தின் இறையான்மையை கேள்விக்குள்ளாக்கும் வகையில் சபாநாயகர் இல்லாத கலாநிதி பட்டத்தை இருப்பதாகக் கூறி மக்களை ஏமாற்றியிருக்கின்றார்.

சபாநாயகர் மாத்திரமின்றி இவ்வாறு மக்களை மேலும் பலர் ஏமாற்றியிருக்கின்றனர். பிரதி சபாநாயகர் ரிஷ்வி சாலி தன்னை விசேட வைத்திய நிபுணர் எனக் குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால் அவர் சாதாரண வைத்தியரொருவர் மாத்திரமே. அதேபோன்று நகர அபிவிருத்தி அமைச்சர் அநுர கருணாதிலகவுக்கும் கலாநிதி பட்டம் இல்லை எனக் கூறப்படுகிறது.

மின்சக்தி அமைச்சர் புண்ணியஸ்ரீ குமார ஜயக்கொடிக்கும் உயர் கல்வி தகைமை பட்டம் எதுவும் இல்லை எனக் கூறப்படுகிறது. இவ்வாறு பொய் கூறிய ஒவ்வொருவரதும் பட்டங்கள் நாடாளுமன்ற இணைய தளத்திலிருந்து நீக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஹர்ஷண சூரியப்பெரும, அனில் கயந்த, பிமல் ரத்நாயக்க மற்றும் எரங்க குணசேகர போன்றோரும் இந்த நிலைமையிலா இருக்கின்றனர் என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

இங்குள்ளது தனிப்பட்ட நபர்கள் குறித்த பிரச்சினையல்ல. ஆனால் இவர்கள் ஏன் மக்களுக்கு பொய் கூறினார்கள். அமைச்சரவை பேச்சாளரிடம் இது தொடர்பில் கூறிய போது நாம் இதனை பெரிதாக எண்ணவில்லை என்று கூறுகின்றார். மக்கள் நேரடியாக கேள்வியெழுப்பும் இவ்வாறான விடயங்களை அரசாங்கத்தால் உதாசீனப்படுத்த முடியாது.

அரசியலில் கல்வி தகைமையை ஒரு பிரச்சினையாகக் காண்பித்த தேசிய மக்கள் சக்தி இதற்கு நிச்சயம் பதிலளித்தே ஆக வேண்டும்.”– என்றார்.




# ஒரே நாளில் அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் வருகை

ஒரே நாளில் அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்த தினமாகக் கடந்த புதன்கிழமை பதிவாகியுள்ளது.

இதன்படி, மேற்படி நாளில் 9,847 பேர் நாட்டுக்கு வந்துள்ளனர் என சுற்றலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதற்கமைய இந்த மாதத்தின் கடந்த 11ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 68,648 சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

ஒரே நாளில் அதிகூடிய சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்த தினமாக, 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ஆம் திகதி முன்னதாக பதிவாகியிருந்தது.

அந்த தருணத்தில் 8,696 சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்திருந்தனர்.

# சிவனொளிபாத மலை யாத்திரை காலம் இன்று ஆரம்பம்: வர்த்தமானி வெளியீடு



2024 ஆம் ஆண்டுக்கான சிவனொளிபாத மலை யாத்திரை காலம் இன்று முதல் ஆரம்பமாகின்றது.

இதற்கான, விசேட வர்த்தமானி அறிவித்தல் இரத்தினபுரி மாவட்டச் செயலாளர் வசந்த குணரத்னவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தலின்படி, சிவனொளிபாத மலை வளாகத்தில் தற்காலிக தங்குமிடங்களை அமைத்தல், பராமரித்தல், கட்டடங்கள் கட்டுதல், யாசகம் பெறுதல், சுற்றுச்சூழலுக்குத் தீங்கு விளைவிக்கும் வகையில் பொலித்தின் மற்றும் பிளாஸ்டிக் பொருள்களை சுற்றுச்சூழலுக்கு வெளியேற்றுதல் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

யாத்திரை காலம் அடுத்த வருடம் மே மாதம் 13 ஆம் திகதி வரை அமுலில் இருக்குமென வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# மஹிந்தவின் 116 பாதுகாப்பு அதிகாரிகள் நேற்று விடைபெற்று வெளியேறினார்கள்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த 116 மேலதிக பாதுகாப்பு அதிகாரிகள் நேற்று தமது கடமைகளை நிறைவுறுத்திக் கொண்டு வெளியேறியுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த பாதுகாப்பு அதிகாரிகளின் எண்ணிக்கை 60 ஆக குறைக்க பொலிஸ் நடவடிக்கை எடுத்தது.

இதன் ஒரு கட்டமாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு அதிகாரிகள் வெளியேறியுள்ளனர்.

இதன்படி, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்காகப் பிரதான பாதுகாப்பு அதிகாரிகள், நிர்வாக அதிகாரிகள் மற்றும் சாரதிகள் உள்ளிட்ட 60 பேர் மாத்திரமே பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், கவலையான மற்றும் ஏற்றுக் கொள்ள முடியாத செயற்பாடுகளையே அரசாங்கம் முன்னெடுப்பதாக சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் இருந்த முக்கிய அதிகாரிகள் பாதுகாப்பு கடமைகளிலிருந்து அகற்றப்பட்டுள்ளனர்.

பல வருடங்களாக இருந்த பாதுகாப்பு அதிகாரிகள் நீக்கப்பட்டுள்ளனர்.

உணவு பரிசோதகர்கள் கூட பாதுகாப்பு கடமைகளிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை 116 பாதுகாப்பு அதிகாரிகள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு கடமைகளிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர்.

இதற்கான உரிய தெளிவுபடுத்தல்களை அரசாங்கம் இதுவரை வெளியிடவில்லை.

பாதுகாப்பு அதிகாரிகள் பதவி விலக்கப்பட்டமையின் பின்னணியில் ஏதேனும் சூழ்ச்சி இருக்கின்றதா? என்பது சந்தேகம் எழுவதாக சட்டத்தரணி மனோஜ் கமகே குறிப்பிட்டுள்ளார்.

# சர்வதேச பத்திரங்களின் மறுசீரமைப்பை வெற்றிகரமாக முடித்துள்ளது இலங்கை




இலங்கை தனது சர்வதேச பத்திரங்களின் மறுசீரமைப்பை வெற்றிகரமாக முடித்துள்ளதாக நிதி அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

டிசெம்பர் 12 ஆம் திகதி முடிவடையவிருந்த இலங்கையின் சர்வதேச இறையாண்மை பத்திர பரிவர்த்தனையின் ஆரம்ப தரவுகளின்படி, சந்தை பங்கேற்பாளர்களின் மிக அதிக பெரும்பான்மையான பங்கேற்பு இருந்தது.

இது மிகவும் சிக்கலான மற்றும் சவாலான இறையாண்மைக் கடன் மறுசீரமைப்பு என்று அவர்கள் கருதுகின்றனர்.

இது தொடர்பான நடவடிக்கைகள் 16 ஆம் திகதி நிறைவடையவுள்ளதுடன், அதற்கான உடன்படிக்கைகள் 20ஆம் திகதிக்குள் நிறைவடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# இந்திய உயர்ஸ்தானிகர் பிரதமருடன் சந்திப்பு

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, இலங்கை பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை நேற்று வெள்ளிக்கிழமை பிரதமர் அலுவலகத்தில் சந்தித்தார். இந்த சந்திப்பு இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு மற்றும் மூலோபாய கூட்டாண்மையை எடுத்துக்காட்டுவதாக அமைந்திருந்தது.

தற்போது பல்வேறு அபிவிருத்தி நிலைகளில் உள்ள பல இருதரப்பு திட்டங்களின் முன்னேற்றம் குறித்து இந்த கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த தூதுக்குழுவில் உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவுடன் இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் சிரேஷ்ட அதிகாரிகளும் இடம்பெற்றிருந்தனர்.

இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, பிரதமரின் மேலதிக செயலாளர் பி.டபிள்யூ.ஜி.சி. சாகரிகா போகஹவத்த, மற்றும் வெளிவிவகார அமைச்சின் தெற்காசியா மற்றும் சார்க் பிரிவு பணிப்பாளர் நாயகம் நிலுக கதுருகமுவ ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.





# சில பகுதிகளுக்கு மண்சரிவு எச்சரிக்கை

நாட்டின் சில பகுதிகளுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் அறிவித்துள்ளது.

பதுளை மாவட்டத்தின் எல்ல, பசறை, ஹாலிஎல மற்றும் ஹப்புத்தளை ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கண்டி மாவட்டத்தின் மெததும்பர பிரதேச செயலகப் பிரிவுக்கும் மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் குறிப்பிட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -14.12.2024




இன்று பொறுப்புகள் அதிகமாக காணப்படும். எனவேதிட்டமிட்ட அணுகுமுறை தேவை. விஷயங்களை எளிதாக எடுத்துக்கொண்டால் மகிழ்ச்சியுடன் இருக்கலாம்.

பணி நிமித்தமாக சிறிய பயணம் ஒன்றை மேற்கொள்ள நேரும். நீங்கள் பணிகளை ஒழுங்கான முறையில் திட்டமிடுவது உதவிகரமாக இருக்கும்.

உறவில் நல்லிணக்கத்தை தக்க வைத்துக் கொள்ள நீங்கள் உங்கள் துணையுடன் கண்ணியமான அன்பான தொணியில் பேச வேண்டும்.

குறைந்த அளவு பணம் காணப்படும். பணம் சேமிப்பது கடினமாக காணப்படும்.

யோகா மற்றும் தியானம் மேற்கொள்வது உங்களை சாந்தமான மனநிலையில் வைத்திருக்கும். ஆரோக்கியத்தை பராமரிக்கவும் உதவும்.




உங்களின் நெகிழ்வானஅணுகுமுறை காரணமாக நீங்கள் சாதகமான பலன்களைப் பெறலாம். சரியான தொடர்பாடல் பயனுள்ளதாகவும் பல ஆச்சரியங்களை ஏற்படுத்தக் கூடியதாகவும் இருக்கும்.

தவறுகள் ஏற்படாமல் தடுப்பதற்கு உங்கள் பணியில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

உங்கள் துணையிடம் அமைதியான அணுகுமுறை தேவை. எரிச்சலடைவது, உணர்ச்சி வசப்படுவது போன்றவற்றை தவிர்க்க வேண்டும்.

இன்று அஜாக்கிரதை காரணமாக பண இழப்பு காணப்படுகின்றது. அவ்வாறு பண இழப்பு நேரிட்டால் அதனை சமாளிப்பது கடினமாக இருக்கும்.

சளி மற்றும் இருமல் போன்ற உபாதைகளுக்கான வாய்ப்பு உள்ளது. குளிர்ச்சியான உணவுகள் உட்கொள்வதை தவிர்க்கவும்.




தொழில் சார்ந்த மற்றும் யதார்த்தமான அணுகுமுறை தேவை. முக்கியமான முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

தன்னம்பிக்கையுடன் பணியாற்றுவீர்கள். மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லிணக்கத்தை தக்க வைத்துக்கொள்ள தேவையற்றவைகளை பேசுவதை தவிர்த்துவிடுங்கள்.

அலட்சியம் காரணமாக இன்று பணத்தை இழக்க நேரலாம். எனவே பணத்தை கையாளும் போது அதிக கவனம் தேவை.

பற்களில் சிறிய அளவில் வலிகள் ஏற்பட வாய்ப்பிருப்பதால் அவற்றில் கவனமாக இருக்க வேண்டும்.




இன்றுஅமைதியானசௌகரியமான நாள். திருப்தியான எண்ணங்களும் எதையோ பெரிதாக சாதித்தது போன்ற உணர்வும் உங்களிடம் காணப்படும்.

சகபணியாளர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். அவர்கள் உங்களுக்கு நன்கு உதவுவார்கள். புதிய வேலை கிடைப்பதற்கான வாய்ப்புகளும் உள்ளது. இன்று பயணம் மேற்கொள்ள நேரலாம்.

உங்கள் துணையுடன் அன்பு வயப்பட்ட நிலையில் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

இன்று பயனுள்ள சேமிப்பிற்கான நாட்டத்தை கொண்டிருப்பீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்களின் நேர்மறையான மனப்போக்கின் காரணமாக இன்று ஆரோக்கியம் மகிழ்ச்சி அளிக்கக் கூடிய வகையில் காணப்படும்.




இன்று சாதகமான நாள். புதிய தொடர்புகள் இன்று உங்களுக்கு மிகவும் பயன் தருவதாக அமையும். எண்ணங்கள் பூர்த்தியடைவதற்கான வாய்ப்புகள் உள்ளது.

பணியிடச் சூழ்நிலை உகந்ததாக இருக்காது. பணிச்சுமை அதிகமாக இருக்கும். அசௌகரியங்கள் காணப்படும். அது உங்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்தும்.

உங்கள் சமயோஜித புத்தியின் காரணமாக உங்கள் துணையிடம் நல்லுறவைப்பேணி மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்குச் செல்ல வாய்ப்புக் காணப்படுகின்றது.

ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் போன்ற வகையில் உங்கள் கடின உழைப்புக்கான பலனை பெறுவீர்கள். உங்கள் மேலதிகாரி உங்களை பாராட்ட வாய்ப்புள்ளது.

பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று திடமாகக் காணப்படுவீர்கள்.




இன்று மகிழ்ச்சியாகவும் ஆற்றலுடனும் இருப்பது உங்களுக்கு நல்லது. எதையும் எதிர்பாராமல் செயலாற்றுங்கள். கடைசியில் வெற்றி உங்களுடையதே.

நீங்கள் பணிச்சுமைக்கு ஆளாவீர்கள் அது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். பணிகளை திட்டமிட்டு அதன்படி செயல்படுத்துங்கள்.

உங்கள் துணையுடன் ஈகோ சம்பந்தமான பிரச்சினைகள் எழலாம்.

உங்கள் வீட்டை மேம்படுத்துவதற்காக செலவு செய்வீர்கள். அதனால் செலவினங்கள் அதிகரிக்கும். உங்கள் நெருங்கிய உறவினர்களுக்காகவும் பணத்தை செலவு செய்வீர்கள்.

ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது. தொண்டை சம்பந்தமான பிரச்சினைகளுக்கு வாய்ப்பு உள்ளது.




இன்று சாதகமான அல்லது மகிழ்ச்சியான நாளாக அமையாது.

பணிகளில் பொறுப்புகளை ஏற்க நேரிடும். பணியில் கவனம் தேவை. இது உங்கள் நலனை மேம்படுத்த வழிகாட்டும்.

உங்கள் மனதில் உள்ள குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் சூடான வாக்குவாதத்தில் நீங்கள் ஈடுபடலாம். இது உறவின் ஸ்திரத்தன்மையை பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை ஆரோக்கியமாக காணப்படாது. செலவுகள் காரணமாக பணப்பற்றாக்குறை காணப்படும்.

தாயின் ஆரோக்கிய குறைபாடு காரணமாக பணம் செலவு செய்ய நேரிடலாம். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




இன்று மிகவும் துடிப்பான நாள். இன்று வெற்றிக்கு அடிகோலும் நாள். சுய வளர்ச்சிக்கான முயற்சிகளை எடுப்பீர்கள்.

பணிகளை குறித்த காலத்துக்குள் முடிப்பீர்கள். நீங்கள் சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். உங்கள் முயற்சிக்கான பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் சரியான நெறிமுறையை பின்பற்றுவீர்கள். அதன் காரணமாக அவரை நீங்கள் நன்றாக புரிந்து கொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக காணப்படும். பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்வீர்கள்.

உங்களின் தைரியமான மனநிலை உங்களை இன்று ஸ்திரமான ஆரோக்கியத்துடன் வைத்திருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் -14.12.2024



தனுசு

எதிர்பாராத நிகழ்வுகள் நடக்கும். விஷயங்களை வேறு விதமாக அணுகுவது நல்லது. பயனுள்ள முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

பணிச் சூழல் சவாலானதாக இருக்கும். பணிகளில் தவறுகள் நேர வாய்ப்பு உள்ளது. இதனை நீங்கள் தவிர்க்க வேண்டும்.

உங்கள் துணையிடம் நேர்மையான அணுகுமுறையை கையாள்வீர்கள். அவருடன் நீங்கள் அன்பு பாராட்டி பழகுவீர்கள். இது ஆரோக்கியமான சூழ்நிலையை உருவாக்கும்.

நிதிவளர்ச்சி இன்று சிறப்பாக காணப்படும். கடின முயற்சி மூலம் தான் நீங்கள் பலனை அதுவும் தாமதமாகத் தான் அடைய முடியம்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். நல்ல ஆரோக்கியத்தை தக்க வைத்துக் கொள்ள தியானம் மேற்கொள்வது நல்லது.



கும்பம்

இன்று மிதமான பலன்களே கிடைக்கும் நாள். இன்றைய நிகழ்வுகள் உங்களுக்கு சாதகமாக அமைய அமைதியாக இருக்க வேண்டும்.

பணிகளை குறித்த நேரத்தில் முடித்துக் கொடுப்பதற்கான அதிர்ஷ்டம் இன்று காணப்படும். பணிநிமித்தமாக பயணம் மேற்கொள்வீர்கள். இது உங்களுக்குப் பொருந்தும்.

தேவையற்ற வாக்குவாதங்கள் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம்.

இன்று பணவரத்துக்கான வாய்ப்பு குறைவு. எனவே இன்று கணிசமான தொகை காண்பது கடினமாக காணப்படும்.

இன்று ஆரோக்கியத்துக்காக பணம் செலவு செய்ய நேரிடும்.உங்களின் தாயின் ஆரோக்கியத்துக்காக இன்று பணத்தை செலவு செய்வீர்கள்.



மகரம்

இன்று நல்ல பலன்களைக் காண தொழில்சார்ந்த மற்றும் யதார்த்தமான அணுகுமுறை தேவை. எதிர்மறை எண்ணங்களைத் தவிர்த்தல் நலம்.

பணிச்சுமை அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை மேற்கொள்ளும் பொழுது நீங்கள் தடைகளை சந்திக்க நேரலாம்.

உங்கள் துணையுடன் எந்த தொந்தரவும் இல்லாமல் இருக்க அவரை அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

நிதி வளர்ச்சி இன்று அவ்வளவு எளிதாக கைக்கு எட்டிவிடாது. உங்கள் நிதிநிலைமை உங்களுக்கு திருப்தி அளிக்காது.

தொண்டை எரிச்சல் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. குளிர்ச்சியான உணவுகள் உட்கொள்வதை தவிர்க்க வேண்டும்.



மீனம்

உங்களின் இனிமையான தொடர்பாடல் மூலம் சாதகமான பலன்களைப் பெறுவீர்கள். உங்கள் வாழ்வில் முன்னேறுவதற்கான வழிகளை இன்று முயல்வீர்கள்.

பணிச்சூழல் சுமுகமாக காணப்படும். நற்பெயரை எடுப்பீர்கள். நீங்கள் பணியாற்றும் விதமும் உங்கள் தொடர்பாடலும் மகிழ்ச்சி தரும் வகையில் காணப்படும். அது உங்கள் மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும்.

உங்களின் இனிமையான அணுகுமுறை உங்கள் துணையை மகிழ்விக்கும். இது அவருடன் உங்களுக்கு நல்லுறவையும் நல்ல புரிந்துணர்வையும் ஏற்படுத்தும்.

இன்று அதிகமான பணம் காணப்படும். விரைவுக் கடன் மூலம் இன்று பணம் உங்களுக்கு கிடைக்க வாய்ப்பு உள்ளது.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும். நேர்மறையான எண்ணங்களும் அதிக ஆற்றலும் உங்கள் ஆரோக்கியத்தை பராமரிக்க உங்களுக்கு உதவும்.

